# செய்திகள்



காலிங்கராயன் அணைக்கட்டிலிருந்து பாசனத்திற்கு முதல் தண்ணீர் திறந்து விட்டு 735 ஆண்டுகள் ஆனதையொட்டி அவரது வாரிசுகள் அருண்குமார் காலிங்கராயர் மற்றும் சித்தார்த் காலிங்கராயர் வாய்க்காலில் மலர் தூவி மரியாதை செய்தனர்.

# காலிங்கராயனில் முதல் தண்ணீர் திறந்து 735ம் ஆண்டு நிறைவு தினம்

## அணை நீரில் மலர் தூவி வரவேற்பு

பவானி,ஜுன.20-

ஈரோடு மாவட்டத்தின் வேளாண் வளர்ச்சிக்கு வித்திட்டவரும், கால்வாய் வெட்டிமேட்டுப்பாங்கான இடங்களுக்கு தண்ணீர் கொண்டுபோய் சேர்த்து, தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றிய பெருமை, கொங்குநாட்டின் குறுநில மன்னரான காலிங்கராயர்மன்னருக்கு உண்டு.

கடந்த735ஆண்டுகளுக்கு முன் காலிங்கராயன்வாய்க்காலில் முதன் முதலாக தண்ணீர் திறக்கப்பட்ட தினமான நேற்று அந்த நாளினை நினைவு கூறும் வகையில் காலிங்கராயன் மன்னரின் வாரிசுகளான ஊத்துக்குளி ஜமீன் அருண்குமார் காலிங்கராயர், அவரது மகன் சித்தார்த் காலிங்கராயர் ஆகியோர் நேற்று காலை காலிங்கராயன் அணைக்கு வந்து காலிங்கராயர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பின்னர் அணையிலிருந்து காலிங்கராயன் வாய்க்காலில் சீறிப்பாயும் தண்ணீரில் மலர் தூவி மரியாதை செய்தனர்.

ஈரோடுமஞ்சள்கூட்டுறவு விற்பனைச்சங்கத்தலைவர் லிங்கேஸ்வரன், காலிங்கராயன்பாசனசபை கூட்டுறவு கட்டிட சங்கத்தலைவர் மகேஸ்வரன், எலவமலை கூட்டுறவு வங்கி தலைவர் சென்னியப்பன், காலிங்கராயன் கொங்கு வேளாளர் சமூக நல அமைப்புத்தலைவர்பவிஷ் நல்லசிவம், கௌரவத் தலைவர் ஆசிரியர் கந்தசாமி, வேணிரவி, தமிழ் மாநிலகாங்கிரஸ் கட்சி ஈரோடு மாநகர மாவட்டத்தலைவர் விஜயகுமார், நிர்வாகிகள் ஸ்ரீதர், பழனிசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அவர்கள்காலிங்கராயர் வழிபட்டதாக கூறப்படும் எலவமலை செல்லியாண்டியம்மன் கோவிலுக்கு சென்று வழிபட்டனர்.

இதேபோல் ஈரோடு வடக்கு மாவட்ட கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் காலிங்கராயன் அணையில் காலிங்கராயன் மன்னரின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. மேலும் அணையிலிருந்து வெளியேறும்தண்ணீருக்கு மலர்தூவி வரவேற்றனர்.

நிகழ்ச்சிக்கு ஈரோடு வடக்குமாவட்ட செயலாளர் துரைராஜாதலைமைவகித்தார். ஒன்றிய தலைவர்கள் லோகநாதன், தமிழ்ச்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், பிரகாஷ், மூர்த்தி, நகர செயலாளர்கள் ஸ்ரீகுமார், பழனிச்சாமி, வேல்முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் பவானி ஆற்றங்கரையில் காலிங்கராயனுக்கு மணிமண்டபம்மற்றும்பூங்காஅமைக்க கடந்த 2013ம் ஆண்டு அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம் தலைமையில் திட்டம் தயாரித்து, இடம் தேர்வு செய்யப்பட்டு, தமிழக அரசின் அனுமதிபெறப்பட்டது. இந்நிலையில் தற்போதுபணிகள்தொடங்க டெண்டர்விடப்பட்டுள்ளது.

எனவேவிரைவில்காலிங்கராயன் மணி மண்டப பணிகளைதொடங்கிசெயல்படுத்த வேண்டும் என காலிங்கராயன் கொங்கு வேளாளர்சமூகநலஅமைப்பு மற்றும் அனைத்து அரசியல் கட்சியினர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.